## ‘நம் காலத்தின் கலைஞன்!’ டிராட்ஸ்கி மருது ஆவணப்படம்.

ஓவியர் டிராட்ஸ்கி மருது, நம் காலத்தில் தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களை நுண்கலைகளாக மாற்றும் நவீன ஓவியர் என்பது நமக்குத் தெரியும்.திராவிட, இடதுசாரி, அரசியல்நோக்கு கொண்டவர்.

சிறுபத்திரிகை, திரைப்படம், புதிய தொழில்நுட்பம், பிறகலைகளுக்கு இடையிலான இணைப்பு என அவரின் பயணத்தில் அசலான தமிழ்க் கலைஞனாக எப்போதும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்பவர். அவர் குறித்த ஒரு ஆவணப்படம் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றுள்ளது.

இந்த ஆவணப்படம் டிராட்ஸ்கி மருதுவின் அனைத்தும் தழுவிய பங்களிப்பை, அவரது ஆளுமையைப் பேசுகிறது.


பத்திரிக்கையாளர் நக்கீரன் கோபால், நடிகர்கள் நாசர், பொன்வண்ணன், இயக்குநர்கள் மிஷ்கின், வெற்றிமாறன், கவிதாபாரதி ஆகியோரின் பார்வையில், டிராட்ஸ்கி மருதுவின் பயணம், பங்களிப்பு பேசப்படுகிறது.

ஆவணப்படத்தில் உரையாற்றும் டிராட்ஸ்கி மருது, திரைப்படத் துறைப் பணிகள் முதல், செயற்கை நுண்ணறிவு வரை அவரது பார்வையை முன்வைக்கிறார். அந்த உரையாடல் திரைப்படத்தை, கலைகளின் சங்கமமாகவும் புதிய தொழில்நுட்பத்தின் சாத்தியத்தைப் பயன்படுத்த வேண்டிய கலையாகவும் அணுகும் மாணவர்களுக்கு நிச்சயம் பயன்படும்.குறிப்பாக, கலைகளை யாருக்கானதாக எங்கு கொண்டு செல்ல வேண்டும் என்கிற புரிதலை இந்த ஆவணப்படம் உருவாக்கும்.

ஆவணப்படத்தை காண...

https://www.youtube.com/watch?v=0nQPVtj3aYA

## ஃப்ளாஷ்பேக்





முத்து துரை

### மாநகர மேயராக தளபதி!

இன்றைய கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்கள், 1996–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மேயராகப் பொறுப்பேற்றார். அப்போது என் சகோதரர் ஆர்.எஸ்.ஸ்ரீதர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவராக இருந்தார். ஒரு நாள் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் மக்களிடம் குறை கேட்கும் நிகழ்ச்சி, நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அதில் என் அண்ணனுடன் பங்கேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மக்களின் குறைகளைக் கேட்டு அதற்கான தீர்வுகளையும் உடனுக்குடன் வழங்குமாறு அதிகாரிகளை அறிவுறுத்திக் கொண்டிருந்தார். இந்தப் படத்தைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் எனக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

**– முத்து துரை, கோட்டூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கருஞ்சட்டைப் படை!


1946-ஆம் ஆண்டு மே மாதம், மதுரையில் கருப்புச் சட்டை மாநாட்டினை, நடத்தினார் தந்தை பெரியார். அந்த மாநாட்டினைச் சீர்குலைக்க கலவரம் நடத்தப்பட்டு, மாநாட்டுப் பந்தல் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சியைக் காரணமாகக் கூறி, கருஞ்சட்டைப் படைக்கு, அரசு தடை விதித்தது. இதற்குக் கண்டனம் தெரிவிக்க, சென்னை மெமோரியல் மண்டபத்தில் மாபெரும் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார் பெரியார். அந்தக் கூட்டத்துக்கு அனைவரும் கருஞ்சட்டை அணிந்தே வரவேண்டும் என அறிக்கை வெளியிட்டிருந்தார் பெரியார்.

# சீரணி → இளைஞர் அணி

16

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**



ஓவியம் : ரவி பேலட்

# பத்திரிகையாளர்கள் பார்வையில் சீரணி!

*பேரறிஞர் அண்ணா அவர்கள் புற்றுநோயால் உடல்நலம் குன்றியிருந்தபோது, அரசு நிர்வாகத்தை அன்று பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்டோர்தான் கவனித்துக் கொண்டார்கள். அன்று சீரணிக்கு என்று தனி அமைச்சர் இருந்தார் என்றாலும், கலைஞர் அதில் விசேஷ கவனம் செலுத்தினார்.*

*தமிழ்நாடு வரலாற்றில் 1968–ஆம் ஆண்டு மிகவும் சிறப்புக்குரிய ஆண்டு. முதல் முறையாக ஆட்சி அமைத்த திராவிட முன்னேற்றக் கழகம், தனது ஓராண்டு நல்லாட்சியை நிறைவு செய்திருந்தது. 1969–ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்றுதான் **‘மதராஸ்’** மாகாணம் அதிகாரப்பூர்வமாக **‘தமிழ்நாடு’** என்று மாறியது. ஆனாலும், அந்தப் பெயர் மாற்றத்துக்கான தீர்மானம் நாடாளுமன்றத்தில் 1968–ஆம் ஆண்டு நவம்பரில் நிறைவேறியது. சீரணியும் தனது ஓராண்டை நிறைவு செய்திருந்தது.*

*இவற்றைக் கொண்டாடும் விதமாகவும், தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு எப்படி முன்னேறி இருக்கிறது என்பதை மக்களுக்குப் பத்திரிகைகள் வாயிலாக எடுத்துச் சொல்லும்விதமாகவும், அப்போது தற்காலிகமாக செய்தி விளம்பரத் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த கலைஞர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு ஒரு வார கால ‘பிரஸ் டூர்’ ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.*

**பொது நன்மைக்குக் கொண்டுவரும் சீரணியின் தொடக்க விழா, எங்கள் செய்தியாளர் ஒருவராலேயே துவக்கிவைக்கப்பட்டது.**

*அந்த ஒரு வாரத்தில், பத்திரிகையாளர்கள் ஐந்து மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 37 திட்டங்கள் குறித்து, அவர்கள் கண்டு, கேட்டு, உணர்ந்தனர்.*

*அந்தப் பயண அனுபவங்களை ‘எஸ்.ஆர்’ என்ற பத்திரிகையாளர், ‘நம்நாடு’ இதழில், 1968–ஆம் ஆண்டு நவம்பர் 19 முதல் **‘ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள்’** என்ற தலைப்பில் 11 அத்தியாயங்கள் கொண்ட தொடர் ஒன்றை எழுதினார். அதில் 10–வது அத்தியாயத்தில், சீரணி குறித்து விரிவாக எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் இருந்து சில பகுதிகள்:*

*“சில இலட்சங்களைச் செலவழித்துத் தயாரிக்கும் பெரிய திட்டங்கள்... பல ஆயிரங்களைக் கொண்டு நிறைவேற்றிய பொதுப் பணிகள் ஆகிய இரண்டிலும் சீரணியின் பங்கு, உப்பின் ஈடுபாட்டினைப் போல் ஓரளவு- ஆனால், உபயோகம் உணரப்படும் அளவுக்கு இருந்ததனை, செய்தியாளர்கள் குழு, மேற்கொண்ட ஏழு நாள் பயணத்தில் ஆங்காங்கே தெரிந்துகொள்ள நேர்ந்தது.*

*‘கழக வாடைதான் வீசும்’ என்றோ அல்லது ‘கழகத்துக்குப் பக்கபலமாக இருக்கத்தான் உதவும்’ என்றோ எடுத்த எடுப்பிலேயே- கண்ணாடிக்கு ஏற்ற பார்வை என்ற போக்கில்- குறை காணும் போக்கினர், வட ஆற்காடு, கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்குச் சிறிது நேரம் ‘கற்பனைத் தேரில்’ ஏறிவர வேண்டும்.*

*கோவையை அடுத்த முத்திப்பாளையம் என்றொரு கிராமம். ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் பாழடைந்த ஒரு குளம். அதனைச் சீர்படுத்தி, பொது நன்மைக்குக் கொண்டுவரும் சீரணியின் தொடக்க விழா, எங்கள் செய்தியாளர் ஒருவராலேயே துவக்கிவைக்கப்பட்டது.*

*‘சீரணி நூற்றுக்கு நூறு சமுதாயத்துக்குத்தான். அதன் பணி முழுக்க முழுக்கப் பொது நோக்கத்துக்குத்தான்’ என்ற அடிப்படைக் கோட்பாட்டினை மக்கள் சார்பாக, செய்தியாளர்கள் உணரும் ஒரு வாய்ப்பு, எங்கள் குழுவுக்கு ஐந்து மாவட்டங்களிலும் கிடைத்தது.*

*ஆளும் கட்சி ஏற்படுத்தும் இதுபோன்ற அரசாங்க சார்பற்ற அமைப்புகள், பலரால் அரசியல் கண்கொண்டு மட்டுமே பார்க்கப்படுவது புதிது அல்ல! ‘உலகம் முழுவதும் பணியாற்ற’ என்ற உயரிய கோட்பாட்டுக்காக, கோடிக்கணக்கான டாலர்கள் செலவழித்து இயங்கிவந்த கென்னடியின் ‘அமைதிக் குழு’ கூட, பல நாடுகளில் பலதரப்பட்ட மக்களால் கண்டனத்துக்கும், கடுமையான விமர்சனங்களுக்கும் ஆளாக நேர்ந்தது என்பதனை இங்கு நினைவு கூர்வது பொருந்தும்”!*

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

16

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”**

***‘என் அப்பா பெயர் கலைஞர் கருணாநிதி இல்லை. நான் குப்புசாமி மகன். அதனால்தான் ஜெயிக்க முடியவில்லை’ என்று சொல்லி இருக்கிறாரே, தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை?***

*அரை நூற்றாண்டு காலம் தலைவர் பொறுப்பேற்று, கலைஞர் வளர்த்தெடுத்த பேரியக்கமாம் தி.மு.க.வுக்கு டெபாசிட் பறிபோகும் என்று தேர்தலுக்கு முன்பு வீரம் பேசிய, அதே அண்ணாமலையின் வாய்தான், தனது படுதோல்விக்குப் பிறகு, இப்படி கழிவிரக்கம் தேடும் வகையில், தரம்தாழ்ந்து பேசியிருக்கிறது.*

*அண்ணாமலைக்கு நம் கலைஞர் அப்பா இல்லை. அதுபோல, அவரது கொட்டத்தை அடக்கும் வகையில், வெற்றி பெற்று எம்.பி.யாகியிருக்கும் தி.மு.க.வின் கணபதி ராஜ்குமார் அவர்களின் அப்பாவும் கலைஞரில்லை என்பதை, அண்ணாமலைக்கு அங்கிருந்த செய்தியாளர்கள் யாராவது நினைவுபடுத்தியிருக்கலாம்.*



# கோவையில் பறக்கும் கொடி!

*திருக்குவளை எனும் சின்னஞ்சிறு கிராமத்தில், வேளாண் குடும்பத்தைச் சேர்ந்த அய்யா முத்துவேலரின் மகனான நம் கலைஞர், முதன்முதலில் களம் கண்ட 1957–ஆம் ஆண்டு தேர்தலில் தனக்கு எந்தவிதத் தொடர்புமில்லாத, சமுதாய வாக்குச் செல்வாக்கு எதுவும் இல்லாத, அதிகார பலம் இல்லாத கட்சியின் வேட்பாளராக, குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவர் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றிபெற்று, இந்திய தேர்தல் வரலாற்றில் சாதனை படைத்திருக்கிறார். அதனால்தான், அவர் கட்சி எல்லைகளைக் கடந்த தலைவராக- முத்தமிழறிஞராகப் போற்றப்படுகிறார்.*

**களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றிபெற்று, இந்திய தேர்தல் வரலாற்றில் சாதனை படைத்திருக்கிறார்.**


*தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் இருக்கும்போது, இந்திய ஒன்றியத்தை ஆளும் அதிகாரத்தில் உள்ள கட்சியின் மாநிலத் தலைவரான அண்ணாமலை ஏன் கோயம்புத்தூரைத் தேர்ந்தெடுத்தார் என்பதற்கான காரணம், அவர் இன்னார் மகன் என்பதால்தான். வாக்கு வங்கிச் செல்வாக்கை நம்பி கோவையைத் தேர்ந்தெடுத்துப் போட்டியிட்டும், வெற்றி பெறவக்கில்லாமல் போனவர்தான் அண்ணாமலை. 2021–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போதும் அரவக்குறிச்சியில், இதே கணக்குடன் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார் அண்ணாமலை. தன்னை மக்கள் ஏற்காததை திசை திருப்ப நினைத்து, கலைஞரை- தி.மு.க.வை-தி.மு.க வேட்பாளர்களை விமர்சிப்பதாக நினைத்து, தன் தந்தையையே கொச்சைப்படுத்தியிருக்கிறார் அண்ணாமலை.*

...வினா தொடரும்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

515

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131